1968 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மொத்தம் எவ்வளவு போடப்பட்டது என்ற விவரம் இல்லே, தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம். இதை ஆரம்பிக்கவேண்டுமென்று பலரை அணுகியும் யாரும் முன் வராமல் முன் வந்தவர் அவர்தான். மாநில அரசு அவரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் முன் வந்தார்கள். அவர்கள் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்றும், போதிய லாபத்தைப் பெறமுடியவில்லேயென்றும் இன்னும் கணக்கைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலேக்குத் தேவைப் படுகிற மூலப்பொருள்களில் மின்சாரம் முக்கியமாக இருப்பதால் அதிகமான அளவுக்கு மின்சாரம் பயன்படுத்தப்படுகிற நிலைமையிலே இன்னும் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்னும் குறைப்பது மற்ற தொழில்களே ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சரியில்லே என்று அரசு சொல்கிறது. அதற்காக இரண்டு தரப்பினரையும் வைத்து அடுத்த திங்களில் பேச இருக்கிறேன். அவர்களுக்கு ஏற்கெனவே கன்செஷன்ஸ் தரப்பட்டு அவர்கள் நடத்தி வருகிறார்கள்.

புதுக் கல்லூரிகள் துவக்கம்.

*** 142 வின—திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

1968-69-ம் ஆண்டில் மேலூர் அல்லது நத்தத்தில் அரசினர் கலேக் கல்லூரி ஒன்று துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லே.

திரு. பெ. மலேச்சாமி : இந்தப் பகுதி பொருளாதார வளர்ச்சி குன்றிய பகுதியாக இருக்கிறது. கல்லூரி வைப்பதற்காக அரசு குறிப்பிட்டிருக்கிற 5 லட்சத்திற்குப் பதிலாக 2 லட்சத்தைப் பெற்றுக்கொண்டு அங்கு கல்லூரி ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலேவர் அவர்களே, 5 லட்சத்திற்குக் குறைந்த அளவுக்குச் சலுகைகள் காட்டுவதாக இல்லே. பல இடங்களிலே இதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 5 இலட்சத்தை திரட்டி கல்லூரிக்குக் கொடுக்கிறார்கள் என்றாலும் அதற்கு மேலே செலவழித்தால்தான் முதல் தரமான கல்லூரியாக அதை ஆக்க முடியும். அதற்கு மேலே 8, 9 லட்சம் ரூபாய் வரையிலும் கட்டடங்கள் கட்டுவதற்காகவும், ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்காகவும் ஏற்படுகிறது, அதற்கு மேலே பி.எ., பி.எஸ்.ஸி. வகுப்புகள் வைப்பதற்கும் செலவு ஏற்படுகிறது, ஆக மொத்தம் அதற்கு மேலே 20, 25 லட்ச ரூபா வரையில் அரசுக்குச் செலவாகிறது. அது 5 லட்சத்தோடு முடிந்துவிடக் கூடியதில்லே. ஆகவே, 5 லட்சம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். எவ்வளவு பிற்பட்ட பகுதியாக இருந்தாலும் 5 லட்சத்தைக் கொடுக்கவேண்டுமென்ற ஆர்வத்தோடு நிதி திரட்டிக் கொடுத்திருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு 4 கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஐந்து லட்சம் ரூபாயைத் திரட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால் முயற்சி திருவினையாக்கும் என்ற அளவிலே திரட்டித் தரலாம். அதற்குப் பிறகு அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யலாம்.

பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் அனுப்புதல்.

***143 வின—திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா :—

ஓய்வூதியம் (Pension) பெறும் ஆசிரியர்களுக்கு பண விடைத்தாள் (M.O.) மூலம் பணத்தை அனுப்பி வைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லே.